**சென்னை பதினோராவது கூடுதல் சிறப்பு அமர்வு நீதிமன்றம்**

**(வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பான மத்திய புலனாய்வுத்துறை வழக்குகள்) சென்னை.**

**முன்னிலை. திரு.எஸ்.ஜவகர்,பி.எல்.,**

**11-வது கூடுதல் மாவட்ட அமர்வு சிறப்பு நீதிபதி.**

**2021-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 1-ஆம் நாள் திங்கள்கிழமை.**

**ஆண்டுப்பட்டிகை எண்.1/2017ல்**
**கு.ப.ம.எண்.1212/2021**

ஏ.ஶ்ரீராம் ...மனுதாரர்/2-ஆம் எதிரி

/எதிர்/

அரசு தரப்பில் ஆய்வாளர்,
எஸ்பிஈ/சிபிஐ/ஏசிபி/ சென்னை ... எதிர்மனுதாரர்/ புகார்தாரர்

இந்த மனு என் முன்னிலையில் 19/02/2021 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/2-ஆம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் மெசர்ஸ்.பி.சிவகுமார் அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை மூத்த வழக்கறிஞர் திரு.எம்.வி.தினகர் அவர்கள் முன்னிலையாகியும், மற்றும் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எனது பரிசீலனையின் நிமித்தம் வைக்கப்பட்டமைக்குப் பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்திரவு</u>**

இந்த மனுவானது மனுதாரர்/2-ஆம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு-451 உ/இ 457ன் கீழ் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1/2017ல் எதிர்மனுதாரர் லாக்கர் சாவி

50னையும் மற்றும் லாக்கர் நெ.30னை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஈக்காட்டுத்தாங்கல் கிளையில் எதிர்மனுதாரரால் 11/01/2016 அன்று முடக்கம் செய்திருப்பதை முடக்கத்திலிருந்து நீக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்.</u>**

இந்த மனுதாரர் இந்த வழக்கில் 2-ஆம் எதிரி ஆவார். தனக்கு இந்த வழக்கின் சங்கதிகள் தெரியும் என்றும், எதிர்மனுதாரர் 11/1/2016 அன்று தன்னுடைய வீடான நெ.12/9 ஸ்ரீனிவாசா தெரு, ராதா நகர், சென்னை-600 044ல் பரிசோதனை செய்தபோது தன்னுடைய லாக்கர் சாவியை புலன் விசாரணை செய்வதற்காக கைப்பற்றியதாகவும், அதே நாளில் வங்கி லாக்கர் நெ.30னை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஈக்காட்டுத்தாங்கல் கிளையில் இன்வென்ட்ரி எடுத்தபோது 5 வெள்ளி அயிட்டங்கள் இருந்ததாகவும், அதற்கான இன்வென்டரி பட்டியலின் நகலை கொடுத்ததாகவும், கு.வி.மு.ச பிரிவு-102ன்படி சோதனை முடித்த பிறகு மேற்படி பொருட்களை லாக்கரிலேயே வைத்து பூட்டிவிட்டு அதன் சாவி நெம்பர் 50-னை எடுத்து கொண்டதாகவும், மற்றும் தன்னை லாக்கரினை ஆப்பரேட் செய்யாமல் தடுத்தனர். மேற்படி வெள்ளிப்பாத்திரங்கள் இந்த வழக்கிற்கு தேவையற்றதாகும் மற்றும் எதிர்மனுதாரர் மேற்படி வெள்ளி சாமான்கள் குறித்து மற்றும் லாக்கர் சாவியை குறித்து இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றும், மேற்படி சாமான்கள் குடும்பத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு அவை தேவைப்படுகிறது என்றும், இதனால் தனக்கு மன உளைச்சல் ஏற்படுகிறது என்றும், எனவே இந்நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு தான் கட்டுப்படுவதாகவும் மற்றும் எதிர்மனுதாரர் வசம் உள்ள மேற்படி லாக்கருக்குண்டான சாவி 50யை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஈக்காட்டுத்தாங்கல் கிளை எதிர்மனுதாரர் 11/1/2016 அன்று முடக்கம் செய்ததை முடக்கத்திலிருந்து நீக்கி தான் ஆப்பரேட் செய்ய அனுமதிக்குமாறு மனுவில் கூறியுள்ளார்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.</u>**

இந்த வழக்கானது 30/12/2014 அன்று ஒரு எஸ்.சுந்தர் அவர்களிடமிருந்து 30/12/2015 அன்று ரீஜினல் மேனேஜர், ரீஜினல் தலைமை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ரீஜினல் அலுவலகம், சென்னை-II, சென்னையிலிருந்து எழுத்துமூலமாக கொடுத்த புகாரின் அடிப்படையில் திரு.சாப்பா நடராஜன், (1-ஆம் எதிரி) சிறப்பு உதவியாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, திருவேற்காடு கிளை, சென்னை மற்றும் 2-ஆம் எதிரி ஏ.ஸ்ரீராம் எழுத்தர்/ ஷ்ராஃப்/கோடவுன் கீப்பர் , இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஈக்காட்டுத்தாங்கல் கிளை, சென்னை மற்றும்TUFIDCO -ன் மற்றும் பலர் மீது இ.த.ச பிரிவுகள்-120பி உ/இ420, 420உ/இ511 மற்றும் 471ன் கீழும் மற்றும் ஊழல் தடுப்புச்சட்டம் பிரிவு-13(2) உ/இ13(1)(டி)ன் படியும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

1-ஆம் எதிரி மற்றும் 2-ஆம் எதிரி மற்றும் பலர் TUFIDCO -ன் வைப்பீட்டுத் தொகையான ரூ.23.4 கோடி தொகை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, விஜயா மருத்துவமனை கிளை, வடபழனி, சென்னையில் கிளை மேலாளரின் துணையுடன் மேற்படி டெப்பாசிட்டுகளை 2-ஆம் எதிரி ஆள்மாறாட்டம் செய்து மேற்படி போலியான TUFIDCO-ன் போலியான டெப்பாசிட்டுகளை தாக்கல் செய்து ஹைதராபாத்தில் உள்ள பல்வேறு கணக்குகளுக்கு ஆர்.டி.ஜி.எஸ் மூலமாக மாற்றம் செய்யப்பட்டு மற்றும் மேற்படி நிறுவனத்திற்குண்டான ரூ.23.40 கோடியை ஏமாற்ற முயலும்போது, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, விஜயா ஹாஸ்பிடல் கிளை இந்த மோசடி குறித்து தெரிய வந்து, உடனேயே மேற்படி 3 வங்கிகளில் உள்ள கணக்கினை முடக்கம் செய்துள்ளனர். மேலும் இந்த வழக்கில் இ.த.ச பிரிவுகள்-120பி உ/இ420, 420 உ/இ 511, 409, 419, 467, 468, 471இ 472மற்றும் 201ன் படியும் மற்றும் ஊழல் தடுப்புச்சட்டம் பிரிவு-13(2) உ/இ13(1)(டி) மற்றும் 15ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு இந்த நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1/2017 ஆக

எண்ணிடப்பட்டுள்ளது. புலன்விசாரணையின்போது 2-ஆம் எதிரியின் வீடான 12/9 ஸ்ரீனிவாசா தெரு, இராதா நகர், சென்னை-44ல் 11/1/2016 அன்று லாக்கர் நெ.30ல் உள்ள பொருட்களை ஆப்பரேட் செய்யாமல் முடக்கப்பட்டுள்ளது. பின்னர் லாக்கர் நெ.30 மனுதாரர்/2-ஆம் எதிரியின் பெயரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி., ஈக்காட்டுத்தாங்கல் கிளை, சென்னையில் லாக்கர் நெ.30னை 11/01/2016 அன்று சோதனை நடத்தி மேற்படி கணக்கினை முடக்கம் செய்யப்பட்டுள்ளது. லாக்கர் ஆப்பரேஷனின்போது இன்வென்ட்ரி நடவடிக்கைகள் எடுத்து அதில் 809 கிராம் எடையுள்ள வெள்ளிப்பாத்திரங்கள் இருப்பது தெரிய வந்துள்ளது என்றும், அதனை திரும்ப அந்த லாக்கர் நெ.30லேயே வைக்கப்பட்டது. அதிலிருந்து எதனையும் கைப்பற்றவில்லை அந்த லாக்கரின் சாவியை எதிர்மனுதாரர் அவர்களால் புலன் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது என்றும் மற்றும் அதனை ஆப்பரேட் செய்ய விடாமல் முடக்கப்பட்டுள்ளது. மேற்படி லாக்கரில் உள்ள ஆவணங்கள் குற்ற இறுதி அறிக்கையில் வழக்கு பொருட்களாக காண்பிக்கப்படவில்லை. இருந்தபோதிலும் இந்த மனுதாரர்/2-ஆம் எதிரி கடும் குற்றச் செய்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும், எனவே மனுதாரர்/2-ஆம் எதிரி கோரும் மேற்படி பொருட்களை திரும்பக்கோரியுள்ளதும் மற்றும், லாக்கர் ஆப்பரேஷனை முடக்கம் செய்யக்கோரியுள்ள கோரிய மனுவினை தற்போது நிராகரிக்க வேண்டுமென்றும், இந்த மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் எதிருரையில் கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன.

5. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை யாதெனில்,

இந்த மனு அனுமதிக்கப்பட வேண்டுமா? என்பதே இந்த மனுவில் தீர்வு காணவேண்டிய பிரச்சினையாகும்.

**6. பிரச்சினை.**

மனுதாரர் இந்த வழக்கில் 2-ஆம் எதிரியாக உள்ளார். எதிர்மனுதாரர் 11/1/2016 அன்று தன்னுடைய வீடான நெ.12/9 ஸ்ரீனிவாசா தெரு, ராதா நகர், சென்னை-600 044ல் பரிசோதனை செய்தபோது தன்னுடைய லாக்கர் சாவியை புலன் விசாரணை செய்வதற்காக கைப்பற்றியதாகவும், அதே நாளில் வங்கி லாக்கர் நெ.30னை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஈக்காட்டுத்தாங்கல் கிளையில் இன்வென்ட்ரி எடுத்தபோது 5 வெள்ளி அயிட்டங்கள் தன்னால் வைக்கப்பட்டதாகவும் அதற்கான இன்வென்டரி பட்டியலின் நகலை கொடுத்தததாகவும், கு.வி.மு.ச பிரிவு-102ன்படி சோதனை முடித்த பிறகு மேற்படி பொருட்களை லாக்கரிலேயே வைத்து பூட்டிவிட்டு அதன் சாவி நெம்பர் 50னை எடுத்து கொண்டதாகவும், மற்றும் தன்னை லாக்கரினை ஆப்பரேட் செய்யாமல் உள்ளளது என்றும், மேற்படி வெள்ளிப்பாத்திரங்கள் இந்த வழக்கிற்கு தேவையற்றதாகும் மற்றும் எதிர்மனுதாரர் மேற்படி வெள்ளி சாமான்கள் குறித்து மற்றும் லாக்கர் சாவியை குறித்து இறுதி அறக்கையில் சொல்லவில்லை என்றும், மேற்படி சாமான்கள் குடும்பத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு அவை தேவைப்படுகிறது என்று தனது மனுவில் கூறியுள்ளார்.

அரசு தரப்பில் புலன்விசாரணையின்போது 2-ஆம் எதிரியின் வீடான 12/9 ஸ்ரீனிவாசா தெரு, இராதா நகர், சென்னை-44ல் 11/1/2016 அன்று லாக்கர் நெ.30ல் உள்ள பொருட்களை கைப்பற்றப்பட்டுள்ளது. பின்னர் லாக்கர் நெ.30 மனுதாரர்/2-ஆம் எதிரியின் பெயரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி., ஈக்காட்டுத்தாங்கல் கிளை, சென்னையில் லாக்கர் நெ.30னை 11/01/2016 அன்று சோதனை நடத்தி மேற்படி கணக்கினை முடக்கம் செய்யப்பட்டுள்ளது. லாக்கர் ஆப்பரேஷனின்போது இன்வென்ட்ரி நடவடிக்கைகள் எடுத்து அதில் 809 கிராம் எடையுள்ள வெள்ளிப்பாத்திரங்கள் இருப்பது தெரிய வந்துள்ளது என்றும், அதனை திரும்ப அந்த லாக்கர் நெ.30லேயே வைக்கப்பட்டது. அதிலிருந்து

எதனையும் கைப்பற்றவில்லை அந்த லாக்கரின் சாவியை எதிர்மனுதாரர் அவர்களால் புலன் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது என்றும் மற்றும் அதனை ஆப்பரேட் செய்ய விடாமல் முடக்கப்பட்டுள்ளது. மேற்படி லாக்கரில் உள்ள ஆவணங்கள் குற்ற இறுதி அறிக்கையில் வழக்கு பொருட்களாக காண்பிக்கப்படவில்லை. இருந்தபோதிலும் இந்த மனுதாரர்/2-ஆம் எதிரி கடும் குற்றச் செய்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும், எனவே மனுதாரர்/2-ஆம் எதிரி கோரும் மேற்படி பொருட்களை திரும்பக்கோரியுள்ளதும் மற்றும், லாக்கர் ஆப்பரேஷனை முடக்கம் செய்ததை முடக்கத்திலிருந்து நீக்கக் கோரிய மனுவினை தற்போது நிராகரிக்க வேண்டுமென்றும் தனது வாதுரையில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பு வாதுரையையும் கவனமாக பரிசீலனை செய்தபோது, மனுதாரர்/2-ஆம் எதிரியின் லாக்கர் நெ.30னை முடக்கம் செய்து அதில் உள்ள பொருட்களை ஆப்பரேட் செய்யாமல் தடுத்து அந்த சாவியை எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதனை புலன் விசாரணை அதிகாரி 12/01/2016 அன்று இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து அன்றே திரும்ப விசாரணைக்காக பெற்றுக் கொண்டுள்ளார் என்பது தெரியவருகிறது. மற்றும் அரசு தரப்பில் இந்த மனுதாரர்/எதிரி கடும் குற்றச்செய்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும் அதனால் வங்கிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், தற்சமயத்தில் மேற்படி லாக்கரினை ஆப்பரேட் செய்யக்கூடாது என கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்படி லாக்கரில் உள்ள பொருட்களை இந்த வழக்கின் குற்ற இறுதி அறிக்கையில் வழக்கு பொருட்களாக காண்பிக்கப்படவில்லை என எதிருரையில் அரசு தரப்பில் தெரிவித்துள்ள நிலையிலும், மேலும் மேற்படி மனுதாரரின் வீட்டு நிகழ்ச்சிக்கு தேவைப்படுகிறது என தெரிவித்துள்ளதாலும், மனுதாரர்/2-ஆம் எதிரி மேற்படி லாக்கர் 30-ற்குண்டான முடக்கத்தினை நீக்கி அதனை ஆப்பரேட் செய்யலாம்

எனவும், அதே சமயம் மேற்படி லாக்கருக்குண்டான சாவி நெ.50னை மனுதாரர்/2-ஆம் எதிரியிடம் எதிர்மனுதாரர்/சிபிஐ ஒப்படைக்க வேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது. ஆனால், அதே சமயத்தில் மனுதாரர் சோதனைப்பட்டியலில் கண்டுள்ள லாக்கரில் உள்ள வெள்ளிப் பொருட்கள் 809 கிராமின் தற்போதைய மதிப்பு தோராயமாக ரூ.60,000/- இருக்கும் என்பதால், மேற்படிபொருட்களின் மதிப்பின்படி ரூ.60,000/-ற்கு மனுதாரர்/2-ஆம் எதிரி தானே ஒரு பிணை பத்திரம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் மனுதாரர் தொடர்ந்து மனுவில் கண்ட லாக்கரினை ஆப்பரேட் செய்யவும், இந்த லாக்கரில் கண்டுள்ள பொருட்களை உருமாற்றம் செய்யக்கூடாது என்றும் அதனை பயன்படுத்திக்கொள்ள மட்டும் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது. இந்த மனுவில் கண்டுள்ள லாக்கர் சாவி எதிர்மனுதாரர்/சிபிஐ வசம் இருப்பதால், அதனை மனுதாரரிடம் எதிர்மனுதாரர்/சிபிஐ ஒப்படைக்கவும், மற்றும் வங்கி அலுவலர் மேற்படி லாக்கரை மனுதாரர் ஆப்பரேட் செய்யவும் அந்த லாக்கரில் உள்ள முடக்கத்தினை நீக்கவும் உத்திரவிடப்படுகிறது.

. **இறுதியில் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 1-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**11-வது கூடுதல் மாவட்ட அமர்வு சிறப்பு நீதிபதி.**
**(மத்தியப்புலனாய்வு வழக்குகள்)**

வரைவு/தெளிவு உத்திரவு.

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1/2017ல்

கு.ப.ம.எண்.1212/2021.

நாள்.1.03.2021.